**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.**

**MCOP.NO. 42/ 2022**

Deposition of PW -3 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 26.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : **டாக்டர் திரு.அன்பழகன்** | Age | : |
| Father's Name | : | Village | : |
| Calling | : | Taluk | : |

**முதல் விசாரணை**

நான் கரூர் ராஜ் ஆர்த்தோ மருத்துவமனையில் எலும்பு முறிவு சிறப்பு மருத்துவராக பணிபுரிகின்றேன். நான் கடந்த 19.12.2021-ம் தேதியன்று பணியில் இருந்தபோது திரு.கிருஷ்ணமூர்த்தி, த/பெ.நாகராஜ் என்பவர் சாலை விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அப்போது பணியில் இருந்த நான் அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவரது வலது கால் எலும்பு மற்றும் இடது தொடை எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவருக்கு வலது கால் எலும்பிற்கு கம்பிகள் பொருத்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. தொடை எலும்பிற்கு ஆணி பொருத்த அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருந்தது. மேலும் அவர் என்னிடம் 13.01.2026-ம் தேதியன்று மாலை 6.30 மணியளவில் ஊனச்சான்று வாங்குவதற்காக வந்தார். அப்போது அவரை பரிசோதனை செய்து பார்த்ததில் அவரது இரண்டு கால் எலும்புகளிலும் வலியுடன் காணப்பட்டது. இடுப்பு மற்றும் முழங்கால் மூட்டுக்கள் வலியுடனும் அதை சுற்றியுள்ள சதை பகுதிகள் சூம்பிய நிலையில் இருந்தது. அவரால் நீண்ட துாரம் நடக்க முடியாமலும் மற்றும் அவர் முன்பு போல் வலுவான வேலைகள் எதுவும் செய்ய முடியாமல் இருந்தார். இவை யாவற்றையும் கணக்கில் கொண்டு அவரது ஊனத்தின் சதவீதம் 26 சதவீதம் என்று கணக்கிட்டு சான்றிதழ் வழங்கியுள்ளேன். மனுதாரரால் இயல்பாக நடக்க முடியாது. அவருக்கு பொருத்தப்பட்ட உலோக தகடுகள் நீக்கப்பட்டு விட்டது. இடது காலில் பொருத்தப்பட்ட ஆணி மட்டும் உள்ளது. அதை நீக்குவதற்கு ஒரு அறுவை சிகிச்சை செய்யவேண்டும். அதற்கு ரூ.40 ஆயிரம் வரை செலவாகும். நான் வழங்கிய **ஊனச்சான்று ம.சா.ஆ.11** ஆகும். **நுண்கதிர்படங்கள் -2 ம.சா.ஆ.12** ஆகும். வலது கால் எலும்பு முறையாக கூடவில்லை. உடல் உழைப்பு மூலம் வருமானம் ஈட்டக்கூடிய நபராக இருந்தால் முன்பு போல் அவரால் வேலை செய்ய முடியாது. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ளது நிரந்தர ஊனம் ஆகும். நாட்கள் கடந்துவிட்டதால் முழுவதும் குணமாவதற்கு வாய்ப்பு குறைவு.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் காயம்பட்டு அனுமதிக்கப்பட்டபோது மனுதாரருக்கு நான்தான் சிகிச்சை அளித்தேன். சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்வு அவர்

தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டதற்கான ஆவணங்கள் என்னிடம் இல்லை. ஆனால் அவர் சிகிச்சை பெற்று வந்தார். ஊனச்சான்று வாங்குவதற்காக என்னிடம் மனுதாரர் வந்தார் என்றால் சரிதான். வேலையாள் இழப்பீட்டு சட்டத்தின்படி ஊனச்சான்று கணக்கீடு செய்யப்பட்டதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஊனத்தின் தன்மை குறித்து தனியாக கணக்கீட்டுத்தாள் இணைக்கவில்லை. அரசு மருத்துவமனையில் மனுதாரருக்கு ஊனச்சான்று வழங்கிய விவரம் எனக்குத் தெரியும். அங்கு தகுதியான மருத்துவ குழு பரிசோதித்து ஊனச்சான்று வழங்கியுள்ளது என்றால் சரிதான். என்னிடம் மனுதாரர் சிசிச்சை பெற்றார் என்பதற்காக ஊனத்தின் சதவீதத்தை அதிகப்படுத்தி காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. முழுவதும் கூடவில்லை என்று சொன்ன எலும்பு முறிவானது மிக முக்கியமான செயல்பாட்டிற்கு தேவையில்லை. முக்கியமான எலும்பு முறிவு முறையாக கூடியுள்ளது.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்,<br>கரூர். |